# பீனிக்ஸ் பறவையாய் கிளர்ந்து எழும் தி.மு.க.

## மணவிழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

பெருமையோடு எடுத்துச் சொன்னார். தோல்வி, வெற்றி என்பது இரண்டையும் சமமாகக் கருதிப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் தொண்டன்தான் தி.மு.க. என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது.

இன்றைக்கு நடைபெற்று முடிந்திருக்கும் தேர்தலில், ஏதோ நாம் தோற்றுவிட்டது போன்று, அதுவும் படுதோல்வி அடைந்துவிட்டது போன்று, இத்தோடு தி.மு.க.வின் கதை முடிந்துவிட்டது என்று கவிதை இரங்கற்பா பாடுவதற்குகூட முன்வந்திருக்கிறார்கள். நம்முடைய இன எதிரிகள் அந்தச் சூழ்ச்சியில் இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறார்கள்.

தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும் எத்தனையோ தேர்தல்களைப் பார்த்திருக்கிறது. 1949இல் தொடங்கிய நம்முடைய கழகம், 1957இல் நடைபெற்ற தேர்தலாக இருந்தாலும் சரி, 1962இல் நடைபெற்ற தேர்தலாக இருந்தாலும் சரி, 1967இல் நடைபெற்ற தேர்தலாக இருந்தாலும் சரி, 1971இல் நடைபெற்ற தேர்தலாக இருந்தாலும் சரி, இவ்வாறு தொடர்ந்து நடைபெற்றிருக்கும் தேர்தல்களில் பல வெற்றிகளைக் கண்டதுண்டு; பல தோல்விகளையும் நாம் சந்தித்திருக்கிறோம்.

**மீண்டும் கிளர்ந்தெழுவோம்!**

ஆனால், தோல்வி அடையும் நேரத்தில்தான் தி.மு.க. எப்போதுமே ஒரு பீனிக்ஸ் பறவையைப் போன்று கிளர்ந்து எழும் நிலையில் வரும். இப்போதுகூட இங்கு பேசியவர்கள் எல்லாம், ஏதோ சோகத்தில் இருப்பது போன்று பேசினார்கள். நான் பார்க்கிறேன், இந்த மேடையில் இருப்பவர்கள் மட்டுமல்ல; எதிரில் இருப்பவர்கள் கூட சோகமாக உட்கார்ந்து இருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். நாம் சோகமாக இருக்க வேண்டிய அவசியமே இல்லை. நாம்தான் இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறோம்.

நம்முடைய திட்டங்களைப் பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஐந்து ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஏழைஎளியவர்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, நெசவாளர்களுக்கு, தொழிலாளர் தோழர்களுக்கு, அடித்தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மாணவ - மாணவிகளுக்கு, பெண்களுக்கு மகளிருக்கு, ஆசிரியர்களுக்கு என்று, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிய ஆட்சி நம்முடைய திராவிட மாடல் ஆட்சி என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது.

நாம் வெற்றி வாய்ப்பை இழந்து புதிய ஆட்சி பொறுப்பேற்றபோது, புதிய ஆட்சிக்கு பொறுப்பேற்றிருப்பவர்களுக்கு நான் வாழ்த்துச் சொன்னேன். நீங்கள் அந்த அறிக்கையைப் படித்திருப்பீர்கள். அதில், புதிதாக ஆட்சிக்கு வந்திருப்ப வர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள்; ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருப்பவர்களுக்கு ஒரு வேண்டுகோள்: திராவிட மாடல்

> **ஏழை – எளியவர்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, நெசவாளர்களுக்கு, தொழிலாளர் தோழர்களுக்கு, அடித்தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மாணவ மாணவிகளுக்கு, பெண்களுக்கு மகளிருக்கு, ஆசிரியர்களுக்கு என்று, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிய ஆட்சி நம்முடைய திராவிட மாடல் ஆட்சி**

ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றி இருக்கும் திட்டங்களை எல்லாம் நீங்கள் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தேன். நாம் வைத்திருக்கும் கோரிக்கை இன்றைக்கு அது எப்படி நிறைவேற்ற ப்பட்டிருக்கிறது என்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். அதனால்தான் சொன்னேன், நாம்தான் இன்றைக்கும் ஆட்சியில் இருக்கிறோம்.

நான் தேர்தல் நேரத்தில் சொன்னேன், இந்தத் திட்டம் இருக்கும் வரைக்கும், நான் பெண்களுக்கு - மாணவர்களுக்கு மாணவிகளுக்குச் செய்திருக்கும் சாதனைகளை எல்லாம் யாராலும் மாற்றிட முடியாது. எனவே, அந்தத் திட்டம் நடக்கும் வரைக்கும் திராவிட ஆட்சிதான் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது என்று நான் அப்போதே சொன்னேன். அதுதான் இன்றைக்கு இருக்கும் நிலை.

எனவே, இந்தத் தேர்தல் தோல்வியைப் பார்த்து, நான் சிதறிடவில்லை, மனச்சோர்வு அடைந்திடவில்லை.

**234 தொகுதிகளிலும் இன்று முதல் கள ஆய்வு!**

234 தொகுதிகளிலும் இன்றைக்கு என்ன நிலை? எப்படி வெற்றி பெற்றிருக்கிறோம்? எப்படி வைத்து இருக்கிறோம்? என்ன காரணம் என்பது பற்றி ஆய்வு செய்வதற்காக, நாம் ஒரு குழுவை நியமித்திருக்கிறோம். அந்தக் குழு இன்று புறப்பட்டு, 234 தொகுதிகளிலும் ஆய்வு நடத்த இருக்கிறது.

அந்த ஆய்வின்போது, நம்மிடத்தில் என்ன குறை? நம்மிடத்தில் என்ன பிரச் சினை? மக்கள் என்ன நினைத்திருக்கிறா ர்கள்? எது விடுபட்டிருக்கிறது? ஏன் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம்? ஏன் இந்தத் தொகுதியில் வெற்றி பெற்றிருக்கிறோம்? ஏன் இந்தத் தொகுதியில் வெற்றி பெறவில்லை? என்பது பற்றி ஆய்வு செய்வதற்காக அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் குழு மட்டுமல்ல, “உடன்பிறப்பின் குரல்” என்று ஒரு வெப்சைட்உம் ஆரம்பித்து இருக்கிறோம். அந்த வெப்சைட்டில், கழக அமைப்பைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல; பொதுமக்களும், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களும் தங்களுடைய கருத்துக்களை வெளியிடலாம் என்று அந்த வெப்சைட்டை தொடங்கி இருக்கிறோம்.

எனவே, இந்தத் தேர்தலைப் பொறுத்தவரைக்கும் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய கட்சி என் பது ஒரு கட்டமைப்பைக் கொண்டிருக்கும் கட்சி. எப்போது நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததோ, அப்போதே நாம் சட்டமன்றத் தேர்தல் பணியை தொடங்கி விட்டோம். பாக முகவர்களை நியமித்தோம்; பூத் கமிட்டி அமைத்தோம்; “ஒன்றிணைவோம் வா” என்ற தலைப்பில் கழக உறுப்பினர்கள் சேர்க்கும் பணியைத் தொடங்கினோம்; SIR பணிகளை முடித்தோம். அதற்குப் பிறகு, இளைஞர் அணி மண்டல மாநாடு நடத்தினோம்; மகளிர் அணி மண்டல மாநாடு நடத்தினோம்; பாக முகவர்களை அழைத்து மண்டல மாநாடு நடத்தினோம்; ஒவ்வொரு தொகுதிக்கும் பொறுப்பா ளர்களை நியமி த்தோம்; மண்டல அளவில் பொறுப்பாளர்கள் அமைத்தோம். இவ்வளவு பணிகளையும் செய்து ஏன் நாம் ஆட்சிக்கு வர முடியவில்லை?

ஆனால், எந்தப் பணியும் செய்யாமல், வாக்காளர்களைச் சந்திக்கவில்லை; பாக முகவர்களை நியமிக்கவில்லை; இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ‘கவுண்டிங் ஏஜென்ட்’ கூடப் பல இடங்களில் நியமிக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் வெற்றி பெற்று இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அது தவறல்ல.

ஆனால், அதில் என்ன நடந்திருக்கிறது? இன்ஸ்டாகிராம் எனும் சோசியல் மீடியாவைப் பயன்படுத்தி, மிகவும் சோகமாகச் சிறு பிள்ளைகளை, குழந்தைகளைப் பிரச்சாரம் செய்ய வைத்து, அவருடைய தாத்தா - பாட்டிகளை - அப்பா அம்மாக்களை, அவர்கள் வீட்டில் இருக்கும் பெரியவர்களிடத்தில் அந்த குழந்தைகள் மூலமாகப் பிரச்சாரங்களை நடத்தி, ஒரு திட்டமிட்ட பணி நடந்து முடிந்திருக் கிறது. அது நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் போய் விட்டது. ஆனால், இனிமேல் நாம் உஷாராக இருந்து அதையும் முறியடிக்கும் வகையில், திட்டங்களை எல்லாம் தீட்டி இருக்கிறோம்.

**எதைப் பற்றியும் கவலை வேண்டாம் நாம்தான் ஆட்சிக்கு வருவோம்!**

எனவே, நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய கழகம் இருக்கிறது; நம்முடைய இயக்கம் இருக்கிறது; நாங்கள் இருக்கிறோம். எதைப் பற்றியும் நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. மீண்டும் நாம்தான் ஆட்சிக்கு வருவோம், வருவோம் என்ற நம்பிக்கையோடு பணியாற்றுங்கள்.

எனக்கு இருக்கும் கவலை எல்லாம், இந்த ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றிய திட்டங்களைத் தொடர்ந்து, இன்னும் ஐந்து ஆண்டுகள் அந்த வாய்ப்பு கிடைத்திருந்தால் இன்னும் பல பணிகள் நிறைவேற்றி இருப்போம். அது தடைபட்டிருக்கிறது.

நாம் எதிர்க்கட்சியாக இருந்தாலும், இன்றைக்கு மக்களிடத்தில் நாம் போராட்டங்களை, ஆர்ப்பாட்டங்களை உரிமையோடு எடுத்துச் சொல்லும் வகையில், நம்முடைய கடமையை ஆற்றுவோம், ஆற்றுவோம் என்று எடுத்துச் சொல்லி,

இன்றைக்கு மணக்கோலம் கொண்டிருக்கும் மணமக்களை, நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும் “வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்” நீங்கள் வாழுங்கள், வாழுங்கள், வாழுங்கள் என்று சொல்லி, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

நாளை ( 20 ஆம் தேதி )

## பசும்பொன் தா.கிருட்டிணன் 23ஆம் ஆண்டு நினைவு நாள்!

### முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!

*சிவகங்கை, மே 19 -*

நாளை (20ம்தேதி) முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணன் 23வது ஆண்டு நினைவு தினமாகும். இதுகுறித்து முன்னாள் அமைச்சரும் சிவகங்கை மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-



நாளை முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணனின் 23 வதுஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது. ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராகவும் தென்மாவட்டங்களில் கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றிய கழக மூத்த முன்னோடியான பசும்பொன் தா.கிருட்டிணன் 2002மேமாதம் 20ம்தேதி மறைவெய்தினார். அவரது நினைவினைப் போற்றிடும் வகையில்ஆண்டு தோறும் மே மாதம் 20ம் தேதி சிவகங்கை மாவட்ட கழகம் மற்றும் பசும்பொன் தா.கிருட்டிணன் குடும்பத்தினரின் சார்பில் நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு நாளை (20.05.2026 - புதன் கிழமை) 23வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மானாமதுரை ஒன்றியம் கொம்புக்காரனேந்த லில் உள்ள தா. கிருட்டி ணன் நினைவிடத்தில் எனது தலைமையில் கே.ஆர்.பெரியகருப்பன் காலை 9 மணி அளவில் மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு ,பொதுக் குழு உறுப்பினர்கள் ,ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில்

## புதுச்சேரி மாநில தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாநில அமைப்பாளர் இரா.சிவா அறிவிப்பு!

*புதுச்சேரி, மே 19 -*

புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:



புதுச்சேரி மாநில தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (20.05.2026 - புதன்கிழமை) மாலை 4.00 மணி அளவில் புதுச்சேரி சித்தன்குடி ஜெயராம் திருமண மண்டபத்தில் கழக தேர்தல் பொறுப்பாளர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம், புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த மாநில கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், தொகுதி கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து.
2. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்து.
3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

இயற்கை வேளாண்மையைப் பயன்படுத்தும்

## பிரதமர் மோடியின் கருத்தை தமிழ்நாடு எதிர்க்க வேண்டும்!

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தல்!

*சென்னை , மே 19 -*

இயற்கை வேளாண்மையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பிரதமர் மோடியின் கருத்தைத் தமிழ்நாடு அரசு உறுதியாக எதிர்க்க வேண்டும் என வி.சி.க. பொதுச்செயலாளர் ரவிக்குமார் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவு வருமாறு:

பிரதமர் மோடி திடீரென இந்திய மக்களுக்கு சிக்கன நடவடிக்கைகளை பற்றிப் போதிக்கத் தொடங்கியுள்ளார். அவரது சமீபத்திய உரை பெரும்பாலும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை (CAD) பிரச்சினையை மையமாகக் கொண்டிருக்கிறது.

அவர் முன்வைத்த பரிந்துரைகளில், விவசாயம் தொடர்பான ஒன்று குறிப்பாக கவலையளிக்கிறது. விவசாயிகள் இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றும், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைச் சமாளிக்க இது ஒரு சாத்தியமான தீர்வா? என்பதே உடனடியாக எழும் கேள்வி. இந்த பரிந்துரை இலங்கையின் அனுபவத்தை உடனடியாக நமக்கு நினைவூட்டுகிறது.

எனவே விவசாய விளைச்சலில் ஏற்படும் எந்தவொரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியும், தமிழ்நாட்டின் உணவுப் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கும் . அதன் விளைவாக, பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களையே சார்ந்திருக்கும் நிலை அதிகரிக்கும்; இது உணவுப் பொருட்களின் விலையை உயர்த்தி, ஏழை மற்றும் நடுத்தர வர்க்கக் குடு ம்பங்கள் மீது தாங்க முடியாத சுமையை ஏற்படுத்தும்.

மேலும், தமிழ்நாட்டின் ‘மொத்த மாநில மதிப்பு கூட்டலில்’ (GSVA) வேளாண்மைத் துறை தொடர்ந்து கணிசமான பங்களிப்பைச் செய்து வருகிறது. பயிர் விளைச்சலில் ஏற்படும் எத்தகைய வீழ்ச்சியும், தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் வாழும் லட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் கடுமையான வருவாய் இழப்பை ஏற்படுத்தும்.

எனவே, ‘நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்கான ஒரு கருவியாக’ இயற்கை வேளாண்மையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பிரதமர் மோடியின் கருத்தைத் தமிழ்நாடு அரசு உறுதியாக எதிர்க்க வேண்டும். தமிழ்நாட்டு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பு, கிராமப் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதார நலன்களைப் பாதுகாத்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான, சமரசமற்ற ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

---


மும்மொழிக் கொள்கை அனுமதிக்கப்பட்டால் தாய்மொழி அழிவிற்கே வித்திடும்!

## ஒன்றிய அரசுக்கெதிராக இன்றைய ஆட்சியாளர்கள் துணிந்து குரல் கொடுக்க வேண்டும்!

### ‘தினகரன்’நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, மே 19 –

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை தமிழகத்தில் அனுமதிக்கப்பட்டால், நம் தாய்மொழி அழிவிற்கே வித்திடும். எனவே மொழி காத்திடும் முயற்சிகளில் ஒன்றிய அரசிற்கெதிராக இன்றைய ஆட்சியாளர்கள் துணிந்து குரல் கொடுக்க வேண்டுமென ”தினகரன் நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.



தினகரன்

மே 18, 2026 திங்கட்கிழமை

மொழி திணிப்பு

நரேந்திரமோடி பிரதமராக பதவியேற்ற நாளில் இருந்தே, மாநிலங்களின் உரிமைகளை பறித்து, அனைத்தையும் ஒற்றை குடையின் கீழ் ஒன்றாக்கும் முயற்சிகள் நடந்தன. ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே நாடு, ஒரே ரேஷன் என அனைத்தையும் ஒன்றாக்க முயற்சித்த ஒன்றிய அரசு, ‘ஒரே நாடு, ஒரே மொழி’ என்கிற திட்டத்தின் கீழ் இந்தி மொழியை தேசிய மொழியாக மாற்றிட துடிக்கிறது. இதற்காக தமிழ் போன்ற தொன்மையான மொழிகளை அழிக்க துடிப்பதோடு, மெல்ல மெல்ல மக்கள் மத்தியில் இந்தி மொழியை திணித்து வருகிறது. சில மாநிலங்க...

அது வருமாறு:

நரேந்திரமோடி பிரதமராக பதவியேற்ற நாளில் இருந்தே, மாநிலங்களின் உரிமைகளை பறித்து, அனைத்தையும் ஒற்றை குடையின் கீழ் ஒன்றாக்கும் முயற்சிகள் நடந்தன. ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே நாடு, ஒரே ரேஷன் என அனைத்தையும் ஒன்றாக்க முயற்சித்த ஒன்றிய அரசு, ‘ஒரே நாடு, ஒரே மொழி’ என்கிற திட்டத்தின் கீழ் இந்தி மொழியை தேசிய மொழியாக மாற்றிட துடிக்கிறது. இதற்காக தமிழ் போன்ற தொன்மையான மொழிகளை அழிக்க துடிப்பதோடு, மெல்ல மெல்ல மக்கள் மத்தியில் இந்தி மொழியை திணித்து வருகிறது. சில மாநிலங்களில் அதற்கு வெற்றியும் கிடைத்துள்ள நிலையில், தமிழகம் போன்ற ஒரு சில மாநிலங்கள் மட்டுமே இந்தி மொழி திணிப்பை தொடர்ந்து எதிர்த்து வருகின்றன.

இதற்காக தமிழகத்திற்கான கல்வி நிதியை முறையாக தர மறுப்பதோடு, புறவாசல் வழியாக புதிய கல்வி கொள்கையை திணிக்கவும் ஒன்றிய அரசு முயல்கிறது. இவ்வளவு காலமும் தமிழ்நாடு தன் நிலையில் மாறாது, தொடர்ந்து மொழிப் பற்றோடு திகழ்வதற்கு திராவிட ஆட்சிகளே காரணமாக இருந்தது எனலாம். மொழிப்போரால் வளர்ந்த அந்த இயக்கங்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு இன்னமும் உரிய மரியாதை அளித்து வருகின்றன. அதிலும் கடந்த காலத்தில் திராவிட மாடல் அரசானது, இந்தி எதிர்ப்புக்காக தமிழகமே திரண்டு ஒன்றிய ஆட்சியாளர்களை உற்றுபார்க்க வைத்த ஜனவரி 25ம் தேதியை ‘தமிழ் மொழி தியாகிகள் நினைவு நாள்’ என அறிவித்து, தியாகி களுக்கு வீரவணக்கத்தையும், பேரணிகளையும் நடத்திக் காட்டியது. தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கு ஊறு விளைகிற போதெல்லாம், அதை பாதுகாக்கும் கேடயமாகவே திமுக திகழ்ந்து வந்துள்ளது.

பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினும் மொழியை பாதுகாக்க தொடர்ந்து போராடி வந்திருக்கிறார். தமிழ்மொழி, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றை சீர்குலைக்க ஒன்றியத்தில் இருந்து எத்தனை தாக்குதல்கள் வந்தாலும், அதை தடுத்திடும் எக்கு கோட்டையாக கடந்த கால திராவிட மாடல் ஆட்சி திகழ்ந்தது. இந்நிலையில் தற்போது இந்தி திணிப்புக்கான சாத்தியக் கூறுகளை ஒன்றிய அரசு மீண்டும் கையில் எடுக்க தொடங்கியுள்ளது.

அதன்படி ஒன்றிய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், ஜூலை 1 முதல் தொடங்கும் கல்வியாண்டில், 9ம் வகுப்பு மாணவர்கள் குறைந்தது இரண்டு இந்திய மொழிகள் உட்பட 3 மொழிகளைப் படிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு வெளிநாட்டு மொழியைத் தேர்வு செய்ய விரும்பும் மாணவர்கள், 2 இந்திய மொழிகளைப் படிக்க வலியுறுத்துகிறது. இந்தி மொழியை மறைமுகமாக நுழைப்பதற்கு வழிவகைகளை ஆராய்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அரை நூற்றா ண்டுக்கு பின்னர், திராவிட கட்சிகள் ஆட்சியில் இல்லாததை கணக்கில் கொண்டு, ஒன்றிய அரசு இந்தி, சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளை எப்படியாவது திணிக்க முன்வரக்கூடும். புதுமை என்ற பெயரில் ஆட்சியை பிடித்தவர்கள், மொழி காக்கும் போரில் புறமுதுகு காட்டாமல் இருப்பது அவசியமாகும்.

கடந்த காலங்களில் இந்திக்கு எதிராக எவ்வித அணுகுமுறை இருந்ததோ, அதை தொடர்ந்து கடைப்பிடிப்பதே தமிழக மக்களுக்கு நலம் பயக்கும். ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை தமிழகத்திற்குள் அனுமதிக்கப்பட்டால், நம் தாய்மொழி அழிவிற்கே வித்திடும். எனவே மொழி காத்திடும் முயற்சிகளில் ஒன்றிய அரசுக்கு எதிராக இன்றைய ஆட்சியாளர்கள் துணிந்து குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---


## குற்ற உணர்வு!

கூழாங்கல்லின்
மயக்கத்தில்

தாங்கள்
தவற விட்டது
வைரத்தை
என்கிற குற்ற உணர்வு

ஓட்டு எண்ணிக்கை
முடிவதற்குள்ளேயே மக்களிடம்
உருவாகிவிட்டது.





**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*